

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் 1500 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை கழக துணைப் பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. வழங்கினார். இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், சாந்தி பக்தன், டி.ஏ.ராஜ், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, கேபிள்டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், ஆர்.ரஜினிபாபு, பி.எஸ்.சைலஸ், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.டில்லி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல், ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், அ.அப்துல்சலிம், ப.சந்தானகிருஷ்ணன், எம்.கோமலவள்ளி, எம்.எம்.செந்தில், கு.தமிழ்மணி, டி.தேவநேசன் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் தை பொங்கலை முன்னிட்டு 169வது வார்டில், பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள், ஊழியர்கள் சற்றொப்ப 300 பேர்களுடன் துணை மேயர் மு.மகேஷ்குமார் சமத்துவ பொங்கல் கொண்டாடி பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், பகுதி துணை செயலாளர் மு. பாக்கியலட்சுமி, வட்டச் செயலாளர்கள் எல். ஆரோக்கியராஜ், சைதை ஆ.வரதன், மாவட்ட பிரதிநிதிகள் இரா.சுதா பிரியன், ஏ.மஜித், அவை தலைவர் அ.ஆரி, துணைச் செயலாளர்கள் இரா. தமிழ்வாணன், துரை சரவணன், பொருளாளர் சைதை ஆ.விக்டர், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணைத் தலைவர் கரி முல்லா, பகுதி பிரதிநிதிகள் மை.அருள்ராஜ்,வி.என்.செல்வமணி,சூரியன் கே பிரபு ரியாஸ் அகமது,எம். பாபு உள்ளிட்ட கழகத்தினர் பலர் உடனிருந்தனர்.

### துரை.ரஞ்சித்குமார் தலைமை! மு.இராசா எம்.சி - கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# கலைஞர் நகர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் விளையாட்டுப் போட்டிகள் - அறுசுவை உணவு - நல உதவிகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா- க.தனசேகரன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 11–

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலைஞர் நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் விழா முன்னிட்டு மாட்டு வண்டி ஊர்வலம், மயிலாட்டம், ஒயிலாட்டம், விளையாட்டு நிகழ்ச்சிகள், அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (11.01.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 8:00 மணிக்கு, விருகம்பாக்கம் சமூக நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழகப் பொருளாளர் துரை.ரஞ்சித் குமார் தலைமை வகிக்கிறார்.

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி, கலைஞர் நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், பழக்கடை எஸ்.பாஸ்கர், தஞ்சை ஆர்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசேகரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேலும் நிகழ்வில் எஸ்.டி.தங்கராசன், உ.துரை ராஜ், பி.எஸ். முருகேசன், வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் பொன்.வர. லோகு, நிலவரசி துரைராஜ், தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், ஆலந்தூர் மலர்வண்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத் உள்ளிட்டோர் பங்கேற்ற சிறப்பிக்கின்றனர்.

மேலும் எஸ்.கமலக்கண்ணன், எஸ்.விஸ்வநாதன், கா. இளங்கோவன், சுபா.முத்துவேல், எஸ்.அர்ஜுனன், விஜயலட்சுமி, அபுபக்கர், செ.ஜெயக்குமார், புல்லட் முருகன், டி.எஸ்.பி.தென்னரசு, என்.எஸ்.கோபி, பி.சார்லஸ், கே.ஜி.பாபு, டி.பி.சிபி, எம்.எம். சுரேஷ், ஐ.சி.ஐ.சி.ஐ. செல்வம், ஆர்.வெங்கடேஸ்வரன் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் பகுதிக் கழக நிர்வாகிகள் சா.நாகராஜன், வாட்டர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில்

# “திராவிட பொங்கல் - சமூக நீதி திருவிழா “ ஒரு நாள் கால்பந்தாட்ட போட்டி!

### செ.தமிழ்வேந்தன் தலைமையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசுகள் வழங்குகிறார்!

சென்னை, ஜன.11-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் “திராவிட பொங்கல் சமூக நீதி திருவிழா “ ஒரு நாள் கால்பந்தாட்ட போட்டி 11012026 அன்று காலை 9.00 மணி முதல் ஜமாலியா விளையாட்டு திடலில் பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்.

வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி, S. புஷ்பராஜ், M. A. டீக்கா M.Z. அபோய், G.கிருஷ்ணகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர். பகுதி கழக நிர்வாகிகள் தில்லை கதிரவன், பெரம்பூர் ராஜன், புல்லட் கி. ரமேஷ், கினார் ஆறுமுகம், P.புவனைதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக. மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி M.P., ப.தாயகம் கவி.M.L.A., எம். சாமிகண்ணு, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, புனிதவதி எத்திராசன், Z. ஆசாத், P. உதயசங்கர், P.J. துளசிங்கம், பெரம்பூர் ஆர்.மகேஷ், L. பாண்டுரங்கன், நா. துலுக்காணம், பெரோஸ்கான், ராஜ் முகமது, K. வீரமணி, மு.சரவணன், சே.மணி மாறன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

பரிமளா சுரேஷ்பாபு, ஜெ. மணிகண்டன், ஜெ.எம்.நிறைமொழி நன்றி கூறுகின்றனர்.

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்குகிறார்!

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதி சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

### பகுதிச் செயலாளர் டி.காமராஜ் தலைமையில்!

தாம்பரம், ஜன.11-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி சார்பில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் இன்று (11.1.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் மேற்கு தாம்பரம் காவல் நிலையம் அருகில் உள்ள டாக்டர் அம்பேத்கர் திருமண மண்டபத்தில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி. காமராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக தோழர்கள் மகிழ்ச்சியோடு பொங்கல் விழா கொண்டாடிட குதுவாக ஆயிரக்கணக்கான அனைத்து நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு திராவிட பொங்கல் பரிசுகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார். நிகழ்ச்சியில் மாநகர மேயர், துணை மேயர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், கழகத்தின் மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் என அனைவரும் பங்கேற்க உள்ளனர்.

### சை.மு.சேகர் தலைமையில் – தமிழ்ப்புத்தாண்டு – பொங்கல் விழா!

# சைதை 139 (அ) வட்டத்தில் கோலப்போட்டி - கின்னஸ் சாதனை!

### 3172 மகளிர்க்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பரிசு வழங்கினார்!

சென்னை, ஜன.11 தமிழ்ப்புத்தாண்டு தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு ராகவன் காலனி விளையாட்டு திடலில் சைதை மேற்கு பகுதி 139 ‘அ’ வட்டத்தில் வட்டச் செயலாளர் சை.மு. சேகர் தலைமையில், பகுதி செயலாளர். 10 வது மண்டலக் குழுத் தலைவர். எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் சைதை. மா.அன்பரசன், களக்காடி எல்லப்பன், சைதை சாதிக், டி.என்.சிவமணி,வி.பி.ஜானகிராமன் வரவேற்றிட கோலப் போட்டியில் கலந்து கொண்டு உலக கின்னஸ் சாதனை சான்றிதழ் பெற்ற 3172 மகளிர்க்கு பரிசுகள் வழங்கி மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றினார்.

இதில் சைதை எஸ்.குணசேகரன், வாசுகி பாண்டியன், ரத்னா லோகேஸ்வரன், சைதை.த.சம்பத், சைதை ஆர்.ரமேஷ், அட்கோ.கமலநாதன், ந.தமிழரசு, எம். நாகா, எஸ்.பி.கோதண்டன், வீ.மதிவாணன், ஜி. கே.ராமசந்திரன், த.மணி, ஆர். கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், வெ.புருசோத்தமன், இ.வரதன், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், ஜிம்.க.பிரபு, கொடி. பாலா, சார்ப்.சரவணன், மு. கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், ஆர்.வி.நகர். அ.அயாத் பாஷா, இரா.சத்யா, ம.சுகுமார், க.தீபன், என்.தீனதயாளன், ப.நரேஷ், பூ.பாஸ்கர், ஜி.ஏழுமலை, கொடி. து.சுரேஷ்பாபு, டி.கோபாலகிருஷ்ணன், யமஹா. ராஜேஷ், எஸ் முகமது அலி, நியு காலனி சம்பத், வீடியோ. எழில், ஆ.சுப்பிரமணி, சி.டி.காசிநாதன், து. முரளி, எல்.சந்திரன், கே. விஜயகுமார், வி. வாசுதேவன், என். ரமேஷ், ப.எழிலரசன், எஸ். சையத்ஜலால், எஸ்.சரத்குமார், ஆர்.தண்டபாணி, விஜபி.சுரேஷ், எஸ்.நித்யானந்தன், மு.காளியப்பன், துளசி சந்திரசேகர், இ.வ.ரகுபதி,

மு. காத்தவராயன், ஆட்டோ.சேகர், எம். சுந்தரேசன், வி. ஆதிகேசவன், ஜி.நாகதேவி, கே.பாரி கே.வெங்கடேசன், வி.வெங்கடேசன், ஜி.தங்கராஜ், கே. மணிகண்டன், ஜோ.அந்தோணி, டி.சரவணன், த.வின்சென்ட், எஸ். அருண்குமார், ப.தினகரன், து.வடிவேலன், மூ.கௌதம், வி.பி.சிவகுமார், எஸ்.முருகன், ஜெ.தமிழ்ச்செல்வன், ப. அருண்பாபு, சி.மங்கையர்திலகம், ஜி.ரஞ்சித், ம.திலீபன், உ. மகேஷ், ஜி. வெற்றிவேல், எஸ், ஜீவா, கே.விக்னேஷ், எஸ்.ராஜேஷ், எம்.மணிகண்டன், தா.கார்த்திக், மதிப்பிரியன், கே.சுனில்குமார், எஸ். முத்து, வி. தீபக், வி.வினோத், வ.ராஜா, கா. மூர்த்தி, எம்.சதீஷ், கே.விஜய், எஸ்.வி.நட்டார், பா.வெங்கட்ராமன், ஆர். கன்னியப்பன், ஜெ.விஜயகுமார், எஸ்.அன்னபூரணி, எஸ்.பி.தினேஷ், டி.பிரவீன், ப.மோகன், எம்.பிரசாத், ஆர்.விஜயா, எஸ்.உமா மகேஸ்வரி, ஆனந்த், பி.டி.சி.வெங்கடேசன், டைலர்.ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் இடைக்கழி நாடு பேரூராட்சி 12–வது வார்டில் பொங்கல் திருநாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆணைக்கிணங்க மாவட்ட அவை தலைவர் எஸ்.இனியரசு, பேரூர் செயலாளர் மோகன்தாஸ், பேரூராட்சி தலைவர் சம்யுக்தா ஐயனார், பேரூர் துணை செயலாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் ஆலோசனையின் படியும் 12வது வார்டு கவுன்சிலர் லட்சுமி சங்கர், பேரூர் கழக துணை செயலாளர் பி.சங்கர் ஆகியோர் ஏற்பாட்டில் 250 குடும்பங்களுக்கு வேட்டி, சேலை உள்ளிட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வார்டு செயலாளர் பி.திருமலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துறைமுகம் மேற்கு பகுதி 57வது வட்டத்தை சார்ந்த சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி மறைந்த கே. ஆர். மதன் உடலுக்கு துறைமுகம் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ். இராஜசேகர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் பகுதி துணை செயலாளர் கே. ஆர். அபரஞ்சி, வட்ட செயலாளர்கள் ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதி டி. எஸ். சேகர், வட்ட கழக நிர்வாகிகள் ஜி. நேரு, கே. முத்து, இ. மாயா, டி. கே. சங்கர், எம். சரவணன், வி. ஸ்டாலின், அலெக்ஸ், கஸ்தூரி,பி.கர்ணா , கே. ஆர். மணிரத்னம்,கே.ஆர்.எம்.தர்மா , கே. தன பாக்கியம், எம். ராணி, பத்மா, எம். செல்வி, முத்தமிழ் செல்வி மற்றும் கழக தோழர்களும், மகளிர்களும் அஞ்சலி செலுத்தினர்.

### 99வது வார்டில் பொங்கல் விழா!

# மாநகராட்சி பணியாளர்களுக்கு புத்தாடைகள்!

### பரிதி இளம் சுருதி எம்.சி. வழங்கினார்!

சென்னை, ஜன.11-

கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஏற்பாட்டில், எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மாநகராட்சி அதிகாரிகள், சாலை பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், சுகாதாரத் துறை பணியாளர்கள், மின் துறை பணியாளர்கள், வருவாய்த்துறை பணியாளர்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத் துறை, மற்றும் ஓட்டேரி மயான பூமியில் தனியார் நிறுவனமான ஜேகேட்ரேட்ஸில் தூய்மை பணியாளராக பணிபுரியும் பணியாளர்கள் உள்ளடங்கிய 300 நபருக்கு, (09/01/2026)

வெள்ளிக்கிழமை காலை 9மணி அளவில் புரசைவாக்கம் ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் கல்யாண மண்டபத்தில், கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பரிதிஇளம்சுருதி அவர்கள் ஆங்கில புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளான பொங்கல் முன்னிட்டு புத்தாடை வழங்கினார்,

உடன் உதவி செயல் பொறியாளர் சுரேஷ் பாபு, உதவி வருவாய் ஆய்வாளர் எஸ்.ரமேஷ், 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் சுபாஷ், மின் துறை பொறியாளர் திரு.கே.கந்தன், சுகாதாரத்துறை பொறியாளர் கே.கார்த்திக், மற்றும் கவியரசன், வரிவசூலர் சி.சந்திரசேகர், உரிமம் ஆய்வாளர் ஜி.இ. கிருஷ்ணமூர்த்தி, தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் திருமதி.இந்திரா, கவிதா, ஏசுதாஸ், கிருபா, ஜே. டி.பாபு, மற்றும் சாலை பணி மேற்பார்வையாளர்கள் சிவா, ஞானபிரகாசம், விக்னேஷ், மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு வேண்டுகோளுக்கிணங்க தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ந.மோ முரளி தலைமையில் கழகத் தோழர்களுக்கு தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் புத்தாடைகள் வழங்கினர். இதில் கோடம்பாக்கம் மு சத்தியா, கோசு மணி, கார்த்திகா, பாஸ்கர் மற்றும் பலர் பங்கேற்றனர்.